**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம்- 1 இன் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்றிட்டம்) 2013**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் 1 இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்டமானது 2001 பெப்ரவரி 20 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் கீழ் கொழும்பு நகரத்தில் வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை மீதான விரிவான வடிவமைப்பு கற்கைக்காக ஜப்பான் யென் 580 மில்லியனிற்கு சமமான ரூபா 417 மில்லியன் தொகையான மானியத்துடன் தொடங்கப்பட்டது. கொட்டாவை முதல் கடுவலை வரையான (கட்டம் -1) 11 கிலோமீற்றர் நெடுஞ்சாலை ஒப்பந்தத்திற்கு 2007 மார்ச் 20 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேபிஐசீஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் எஸ்எல்- பி89 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் கடுவலை முதல் கடவத்தை வரையான (கட்டம் -II) 8.9 கிலோமீற்றர் நெடுஞ்சாலை ஒப்பந்தத்திற்கு முறையே 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை இரண்டு கடன் உடன்படிக்கைகள் (எஸ்எல்- பி 91 மற்றும் எஸ்எல்- பி 101) கைசாத்திடப்பட்டிருந்தது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு (எம்ஓஎச்பி & எஸ்) நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) அமுலாக்கல் முகவர்களாக உள்ளது. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன,

(அ) கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கொழும்பு நகரத்திலிருந்து தெற்கு நெடுஞ்சாலை மற்றும் ஏனைய தேசிய வீதிகள் என்பவற்றுடன் இணைந்த கொழும்பின் வெளிப்புறத்தில் நெடுஞ்சலையை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியத்துடன் தொடர்பை உயர்த்துவதற்கும்.

(ஆ) பிரதான வீதிகள் மற்றும் தெற்கு நெடுஞ்சாலைக்கு தொடர்பாக இருக்கும் கொழும்புக்கு வெயியேயுள்ள நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலம் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பை உறுதிப்படுத்தி கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலை குறைப்பதற்கும் அதன்மூலம் இலங்கையிலுள்ள பிராந்தியங்களிற்கு இடையில் பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தலும்.

செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 72,924 மில்லியனாக இருந்ததுடன் அதில் ஜப்பான் யென் 46,974 மில்லியனிற்கு சமமான ரூபா 52,007 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. கட்டம் 1 இன் கீழான நெடுஞ்சாலையின் நிர்மாணம் 2008 மே மாதத்தில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் அளவில் 48 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது 2009 ஒக்தோபர் 22 இலேயே வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டளவில் 42 மாதங்களிற்குள் 11 கிலோமீற்றர்கள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், கட்டம் II இன் கீழ் நெடுஞ்சாலை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2009 ஒக்தோபர் 22 இல் வேறொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 23 அளவில் 36 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்தப் பகுதி வேறாக கருதப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செய்யப்பட்ட வேண்டுகையில் வழங்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதிய

கடிதத்தின் பிரகாரம் 2011 செப்தெம்பர் 05 இலிருந்து இன்னொரு கண்காணிப்பு பிரிவின் (பிஎம்யூ) கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. கொட்டாவை முதல் கடுவலை வரையான (கட்டம் 01) பிரிவு பூர்த்தியாக்கப்பட்டு 2014 மார்ச் 08 இல் வாகன போக்குவரத்திற்கு திறக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் (ஜீஓஎஸ்எல்) மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அவற்றிற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 8,136 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 25.631 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு மற்றும்

முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 853,446 | 1,880,728 | 195,601,601 |
| செயற்திட்ட முகாமைத்தவம் | 735,312,127 | 765,433,941 | 3,428,752,172 |
| காணி மற்றும் காணி முன்னேற்றம் | 300,716,035 | (766,217,867) | 2,719,629,115 |
| சிவில் வேலைகள் | 619,882,450 | 3,696,031,011 | 18,124,183,068 |
| ஆலோசனை | 273,997,833 | 219,668,901 | 1,143,384,710 |
| ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் ஏனைய கிரயங்கள் | 5,560,897 | (166,365) | 19,751,990 |
| | 8,136,322,788 | 3,916,630,349 | 25,631,302,656 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், கடன் இல. எஸ்எல்பி- 89 இன் கீழ் பணவளிப்புச் செய்யப்பட்ட மொத்த நிதிகள் ரூபா 3,342,223,619 ஆக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நேரொத்த தொகை ரூபா 3,218,959,948 ஆக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது. ரூபா 123,263,671 விதித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் இலக்கங்கள். 23 மற்றும் 24 இன் பிரகாரம், ரூபா 587,973,996 தொகை ஒப்பந்தக்காரர்களிற்கு செலுத்த வேண்டியவையாக இருந்தது. அதேநேரம், பேரேட்டு கணக்கின் பிரகாரம், இது ரூபா 554,694,447 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 33,379,549 ஆன வித்தியாசம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆலோசனை மற்றும் சிவில் வேலைகளிற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நிதிகளில் ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற அத்தகைய சொத்துக்கள்

செயற்திட்டத்தின் ஆதனங்களாக உள்ளன. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களில், ரூபா 27,291,475 பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காணிச் சுவீகரிப்பு மீதான இழப்பீடு தவறான கணிப்பீடுகள் காரணமாக ரூபா 600,000 ஆல் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க 8.3.9 ஆம் பிரிவில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக, மேந்தலைக் கட்டணங்களாக 2013 திசெம்பர் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 141,741,679 தொகை அனுப்பப்பட்டிருந்தது.

### 5.1.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,468,490 செலுத்து வேண்டிய மீதியொன்றை காட்டியிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கிலுள்ள தொடர்புபட்ட நேரொத்த மீதி அத்திகதியில் உள்ளவாறு ரூபா 10,602,815 ஆக காட்டப்பட்டிருந்தது. வித்தியாசம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் அவசியமான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் பேணபப்பட்ட நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 647,225,985 ஆன மீதி வெளிச்சுற்று நெடுஞ்சாலை செயற்திட்டம் -(கட்டம் II) நடைமுறைக்கணக்கின் ரூபா 646,654,827 மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை. ரூபா 571,158 ஆன வித்தியாசம் இனங்காணப்பட்டிருந்தது ஆனால் இது உரிய கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தால் பேணப்பட்ட கடன் கணக்கின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,218,959,948 ஆக காட்டப்பட்டிருந்தது. அதேநேரம் பொது திறைசேரியால் பேணப்பட்ட தொடர்புபட்ட கணக்குகளிலுள்ள மீதி இது ரூபா 3,284,007,431 ஆக காட்டப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட ரூபா 65,047,482 ஆன வித்தியாசம் உரிய கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
| --- | --- | --- | --- | --- |
| | ஜ.யென் மில் | ரூபா மில் | ஜ.யென் மில் | ரூபா மில் |
| கடன் பி -89 | 21,917 | 24,547 | 26,167 | 21,806 |

| | | | | |
|---|---|---|---|---|
| கடன் பி -91 | - | - | 14 | 12 |
| கடன் பி -101 | - | - | 147 | 123 |
| இலங்கை அரசாங்கம் | 8,920 | 8,109 | 7,382 | 6,152 |
| | 30,837 | 32,656 | 33,710 | 28,093* |

* இந்த தொகை அட்டுறு செலவினத்தை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து வித்தியாசப்படுகிறது.

### 6.2 பௌதீக செயலாற்றல்

### 6.2.1 அதிவேக நெடுஞ்சாலையின் கட்டம் 01 இன் பௌதீக முன்னேற்றம்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தால் அடையப்பட்ட உள்ளபடியான முன்னேற்றம் மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட 100 சதவீத முன்னேற்றங்களிற்கு எதிராக 90 சதவீதத்தில் இருந்தது. ஆதலால், உள்ளபடியான முன்னேற்றம் 10 சதவீதத்தால் பின்தங்கியிருந்தது. நெடுஞ்சாலையின் 27+560 கிலோமீற்றர் முதல் 18+100 வரை மற்றும் 18+100 கிலோமீற்றர் முதல் 17+500 கிலோமீற்றர் வரையான நிர்மாணத்திற்கான கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனன.

(அ) 2012 ஆகஸ்ட் மாதத்தின் 2/2102 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த கொள்வனவு கிரயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சகல விடயங்களையும் கருத்திற்கொள்வதன் மூலம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 83 முரண் கட்டளைகள் நிலவுகையில் ரூபா 2,891,143,073 தொகையான சிவில் வேலைகளின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 52,947,744 பெறுமதியான 03 முரண் கட்டளைகள் ஆரம்ப பாதீடுகளிலிருந்து மீளப்பெறப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை செயற்திட்டத்தின் தகராறுகள் மற்றும் பாதகமான விளைவுகளிற்கு வழிவகுக்கும். மேலும், அத்தகைய நோக்கெல்லை முரண்களிற்காக அமைச்சரவை அங்கீகரித்த கேள்விச் சபையிடமிருந்தான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயம் நெடுஞ்சாலைக்கான உள்ளக மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நோக்கெல்லையிலுள்ள மாற்றங்கள் காரணமாக 20 சதவீதத்தால் விஞ்சியிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் அதிவேக நெடுஞ்சாலையின் ஆரம்ப வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காத அத்துருகிரியவில் உள்ளக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் அதே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட புறம்பான ஒப்பந்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கை அந்த நோக்கத்திற்காக கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. 2012 ஆகஸ்ட் மாதத்தின் 2/2102 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வரிசை அமைச்சு செயலாளரின் சிபார்சுகள் ரூபா 2,077,069,589 கிரயத்தில்

அத்துருகிரியவில் உள்ளக மாற்றத்தின் நிர்மாணத்திற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின் 59.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் உள்ளடக்கங்கள் ஆரம்ப கட்டத்தில் மதிப்பிடப்பட்டிருக்காத அத்துருகிரியவில் உள்ளக மாற்றத்தில் நடைபாதை நிர்மாணம் மற்றும் அஸ்பற் வெயரிங் இடலிற்கான ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தகாரரால் பெறப்பட்டிருக்காததுடன் உப ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 11,067,453 தொகையான கிரயம் கோரப்பட்டிருந்ததுடன் முரண் கட்டளையின் கீழ் இருந்தது.

(iii) கொத்தலவல உள்ளக மாற்றங்களின் நிர்மாண வேலைகள் நெடுஞ்சாலையின் கட்டம் II இன் கீழ் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் ரூபா 84,657,425 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தற்ககாலிக உள்ளக மாற்றங்கள் நெடுஞ்சாலையின் கட்டம் I இன் கீழான கிரயத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. கொத்தலவல தற்காலிக உள்ளக மாற்றங்களிற்கான நிர்மாண ஒப்பந்தம் 2013 நவம்பர் 13 இல் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய வேலைகள் செயற்திட்டத்தின் அங்கீகாரம் இல்லாமல் உப ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) தெற்கு நெடுஞ்சாலை (எஸ்ரீடிபி) தொடங்குவதற்கு முன்னர் கொத்தலவல உள்ளக மாற்றங்களின் நிர்மாணம் பூர்த்தியாக்குவதற்காக திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், தற்காலிக உள்ளக மாற்றம் நிரந்தர உள்ளக மாற்றத்தின் நிர்மாணத்திலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தால் ரூபா 258,918,579 கிரயத்தில் முரண் கட்டளை ஒன்றின் கீழ் கட்டப்பட்டிருந்தது. செயற்திட்டமானது ஆரம்ப கட்டத்தில் உள்ளக மாற்றத்தை நிர்மாணிப்பதற்கு முறைப்படி திட்டமிடப்பட்டிருந்தால் தற்காலிக உள்ளக மாற்றங்களிற்காக ஏற்பட்ட செலவினம் சேமித்திருக்க முடியுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்காலிக உள்ளக மாற்றம் அழிக்கப்பட்டிருந்ததுடன் புதிய நிரந்தர உள்ளக மாற்றம் ரூபா 928,993,187 கிரயத்தில் செயற்திட்டத்தால் கட்டப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், 24 மாதங்களிற்குள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட நிரந்தர உள்ளக மாற்றம் 36 மாதங்களின் பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ரூபா 16.91 மில்லியன் தொகையான அவற்றின் மீதான தாமதக்கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளரின் விளக்கங்களின் பிரகாரம், தற்காலிக உள்ளக மாற்றம் நிர்மாணிக்கட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிரந்தர உள்ளக மாற்றத்தின் நிர்மாணத்திலுள்ள தாமதத்தை தவிர்ப்பதில் எவ்வித வருமான இழப்பும் இல்லாமல் நெடுஞ்சாலையை செயற்படுத்த முடியும்.

(இ) நிர்மாண ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், ஒப்பந்தகாரர் வீதி நிர்மாண நோக்கத்திற்காக தரக் காப்பீட்டு முறைமையை பின்பற்ற வேண்டியதுடன் அதற்காக தரக்காப்பீட்டு பதவியணியினர் திட்மிடப்பட வேண்டியதுடன் ஒப்பந்தகாரரால் ஈடுபடுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் ஒப்பந்தகாரர் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, தரக்காப்பீட்டு நடவடிக்கைகளிற்காக மேலதிக பதவியணியினர் செயற்திட்ட ஆலோசனையாளரால் சேர்க்கப்பட்டிருந்ததுடன் முரண் கட்டளை ஊடாக ரூபா 7,258,126 தொகையை கோரியிருந்தது.

(ஈ) நெடுஞ்சாலையின் பராமரிப்பில் முக்கியமாக இருந்த 2012 யூலை முதல் 2013 திசெம்பர் வரை 13 நியமங்களின் படியல்லாத உற்பத்தி குறிப்புரைகள் (என்சீபிஎன்) ஆலோசனையாளரால் வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. ஆனால்,

அத்தகைய குறிப்புரை தேவைப்பாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்த நிபந்தனையின் 14.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு மேலதிக காலம் வழங்கும் போது வேலை நிகழ்ச்சித் திட்டங்களை திருத்துவதற்கு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 17+500 கிமீற்றர் முதல் 27+560 கிலோமீற்றர் வரை வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டங்களை சமர்ப்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஊ) ஒப்பந்த நிபந்தனையின் 56.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தத்தின் பொறியியலாளர் உள்ளபடியாக செய்யப்பட்ட வேலைகளின் அளவீட்டை சான்றுபடுத்த வேண்டும். எவ்வாறியினும், மூன்று பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் ஒப்பந்தகாரருக்கு ரூபா 68,703,786 ஆன மேலதிக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அத்தகைய மேலதிக கொடுப்பனவுகள் மூன்று மாதங்களிற்கு மேலாக ஒப்பந்தகாரருக்கு மேலதிக நிதி நலன்களை வழங்கிய மூன்று மாதங்களின் பின்னர் அறவிடப்பட்டிருந்தது.

(எ) அளவீட்டுப் பட்டியலில் அனுமதிக்கப்பட்டவாறு ஒரு தொன்னிற்கு ரூபா 14,161 நடைபாதை கற்பதித்தலிற்கான அஸ்பற் கொங்றீட்டின் வீதம் உள்ள போதிலும் முரணிற்கான காரணங்கள் விளக்கப்படாமல் ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவுகள் ரூபா 17,701 வீதத்தில் பிரயோகிக்கப்பட்டிருந்தது.

(ஏ) குறிப்புரைகளின் மாதிரி கூற்று 406.3(உ) இன் பிரகாரம் அஸ்பற் கொங்றீட் நடைபாதை கற்பதித்தலிற்கு முறைபடி நெருக்கமாக இடப்பட வேண்டிய போதிலும் ஆலோசனையாளரால் வேலைக்கமர்த்தப்பட்ட பொருட்கள் பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் கருத்திற்கொள்ளாமல் ஆறு சந்தர்ப்பங்களில் குறைவான நியமத்திலான நடைபாதை கற்பதித்தலிற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஒப்பந்த நிபந்தனையின் 62.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ரூபா 200 மில்லியனை விஞ்சியிருந்த இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 200 மில்லியனை விஞ்சியிருக்காத ஆறு ஐபிசீ கள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) நெடுஞ்சாலை மேற்பரப்பு நிர்மாணத்திற்கான ஆரம்ப வடிவமைப்பின் பிரகாரம் இடப்பட்ட அஸ்பற் படை பொருத்தமற்றதாகவும் வீதிப் பாவனையாளர்களிற்கு பாதுகாப்பற்றதாக இருந்ததாக ரூபா 1,391,365 கிரயத்தில் இடப்பட்ட 2,279 தொன்கள் அஸ்பற் படை அகற்றப்பட்டது. ரூபா 48,677,164 கிரயத்தில் புதிய அஸ்பற் படை பிரயோகிக்கப்பட்டதுடன் முறையான அங்கீகாரம் இல்லாமல் முரண் கட்டளையின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 6.2.3 செயற்திட்டத்தின் காணிச் சுவீகரிப்பும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளும்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த நபர்களை மீள்குடியேற்றுவதற்கு 7.5691 ஹெட்டெயர் விஸ்தீரணமுள்ள ஆறு காணிகள் சுவீகரிப்பதற்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 2,719.6 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 2011 திசெம்பர் இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 99 சதவீதத்தால் நெடுஞ்சாலையின் கட்டம் 01 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 70 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு ஊக்குவிப்பாக ரூபா 13,472,204 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்காக இழப்பீட்டுக் கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 174,492,185 கூட்டுமொத்தத் தொகையான வட்டி ஏற்பட்டிருந்தது.

(இ) கடுவெலவில் 324.17 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணியொன்று இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றத்திற்காக 2009 இல் ரூபா 71,815,877 கிரயத்தில் செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 2,890,781 தொகையும் செலவழிக்கப்பட்டிருந்தது. சுவீகரிக்கப்பட்ட காணிகள் 21 துண்டுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதில், 10 துண்டுகள் இடம் பெயர்ந்த நபர்களிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2013 திசெம்பர் 31 வரையும் பயனற்றிருந்தது.

**6.2.4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான 24 பதவிகளிற்காக 56 நபர்களை சேர்ப்பதற்கு அனுமதித்திருந்தது.

எவ்வாறாயினும், 03 முகாமைத்துவ உதவியாளர்கள், 04 உள்நாட்டு ஆலோசனையாளர்கள், 01 மீள்குடியேற்ற ஆலோசனையாளர், 01 வடிவமைப்பு ஆலோசனையாளர் மற்றும் போக்குவரத்து முறைமை பகுப்பாய்வாளர் என்போர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத உரிய பதவிகளிற்காக செயற்திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளங்களாக ரூபா 7,736,364 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்திற்கான பதவியணியினர் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். செயற்திட்டத்தின் பதவியணி சம்பந்தப்பட்ட அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பதவியணியிக்கு அப்பால் சேர்க்கப்பட்டிருந்த 03 முகாமைத்துவ உதவியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,316,507 தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்ததின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.4 மற்றும் 2.2.7 ஆம் பந்திகளின் பிரகாரம், பதவியணி சேர்ப்பனவுகள் தேசிய புதின பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுவதன் மூலம் செய்யப்பட வேண்டியதுடன் நியமனங்கள் மூன்று ஆண்டுகளை விஞ்சியிருக்காத ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து விடுவித்த உத்தியோகத்தர்களை கொண்டிருந்த சகல செயற்திட்ட பதவியணியினரும் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை

பின்பற்றாமல் 2013 திசெம்பர் 31 வரை சம்பளங்களாக ரூபா 208,796,395 செலுத்தப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் மிகயூதியம், மருத்துவப் படிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை படிகள் என்பன பெறுவதற்கு தகுதியற்றிருந்த போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக மீகையூதியங்கள் மற்றும் மருத்துவப் படிகளாக ரூபா 3,405,403 தொகை செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஊ) 08 ஆண்டு காலங்களாக காலத்திற்கு காலம் செயற்திட்ட பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் உள்நாட்டு ஆலோசனையாளர்கள் போன்ற பிரதான பதவிகளிற்காக பல ஆளணி சேர்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்காக செயற்திட்ட முகாமைத்துவ அநுபவம் மற்றும் நிதி நலன்கள் என்பவற்றினை அளிக்கும் நோக்கில் அமுலாக்கல் முகவராக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது, எனவே, செயற்திட்டத்தின் காலரீதியான அமுலாக்கல் மற்றும் நெருக்கமான கண்காணிப்பு சுமூகமாக செயற்படுகின்ற நோக்கம் என்பன குறைந்த முன்னுரிமையில் இருந்தது.

(எ) நான்கு உள்நாட்டு ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றாமல் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரை ரூபா 642,423 தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. வேலை விபர குறிப்புகளின் பிரகாரம், ஆலோசனையாளர்கள் பிரதிபலனை அளவிட முடிந்திருந்த எவ்தவொரு குறித்த கடமைகளும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அந்த ஆலோசனையாளர்களிற்கு செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆகவே, அந்த ஆலோசனையாளர்களிடமிருந்தான நலனின் அளவு மற்றும் பங்களிப்பு கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

### 6.2.5 மோட்டார் வாகனங்களின் பாவனை

செயற்திட்டத்தின் வாகன அணியானது செயற்திட்ட நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள், 09 வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஒதுக்கப்பட்ட வாகனமொன்று மற்றும் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட 04 வாகனங்கள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 20 ஆந் திகதிய 33(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் வாகன வசதிகளை பெறுவதற்கு தகுதியற்றிருந்த உத்தியோகத்தர்களிற்கு எட்டு மோட்டார் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

### 6.2.6 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக பல்வேறு நோக்கங்களிற்காக ரூபா 2,907,895 பெறுமதியான முரண் கட்டளைகள் அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேந்தலைகளாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2013 திசெம்பர் 31 வரை ரூபா 14,741,679 தொகை அனுப்பப்பட்டிருந்தது.

(இ) ஆறு பொறியியலாளர்கள் 2013 மார்ச் மாதத்தில் ஜப்பானில் 20 நாள் செயலமர்வுகளில் பங்குபற்றியிருந்ததுடன் செயற்திட்டத்தால் ரூபா 2,128,200 தொகை

செலுத்தப்பட்டிருந்ததுடன் 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயலமர்வில் பங்குபற்றியருந்த உத்தியோகத்தர்களால் சனதிபதி செயலாளருக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 18+002 கிமீற்றர் முதல் 18+110 கிலோமீற்றர் வரையான பிரிவில் கனமீற்றர் ஒன்றிற்காக ரூபா 18,696 வீதத்தில் 9218 கனமீற்றர் காட்றொக் உடைப்பதற்காகவும் அகற்றுவதற்காகவும் ரூபா 172,339,728 தொகை உப ஒப்பந்தகாரரால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர் 920 கனமீற்றரை பயன்படுத்துவற்கு அனுமதித்திருந்ததுடன் அதில் 143 கனமீற்றர் பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி றெக் பொருட்களின் பயன்பாடு அல்லது விற்பனை அல்லது கைதவிர்ப்பு என்பன தொடர்பான தகவல் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.